Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

Those who turn the world upside down. Acts.17:6.

Vol. 68 | என் பெலனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூருவேன் சங்.18:1 | நவம்பர் 2022 No.11

பரலோகம் அனுப்பும் எழுப்புதல் ஒரு தேசத்தை இரட்சிக்க முடியும்

Heaven sent Revival can save a nation

Al Whittinghill

"கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது" சங்.33:12.

"நீதி ஜனத்தை உயர்த்தும், பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி" நீதி.14:34; உபா.8:11; சங்.9:17; 50:22.

சரித்திரத்தில், மிகப்பெரிய பேரரசுகளின் அழிந்த பகுதிகள் சிதறிக்கிடப்பதை நாம் அறிவோம். அவை ஒவ்வொன்றும் ஒரு காலத்தில் உலகத்தில் தலைமைப்பகுதியில் இருந்தவைகள் தான். அவை உன்னத நிலைக்கு வளர்ந்து முக்கியத்தைப் பெற்றும் இன்று வெறும் ஞாபகப் பொருட்களாக மட்டும் இருக்கின்றன. இது தான் நம் நாட்டைக் குறித்தும் உண்மையாயிருக்கிறது. பல வரலாற்றாசிரியர்கள் பேராபத்துகளின் நிகழ்வுகளையும், மரணத்தை உண்டு பண்ணும் நோய்களையும் மனித சமுதாயத்துக்காகப் பட்டியலிட்டிருக்கிறார்கள். அவற்றை அறிந்து திடுக்கிடுகிறோம். தேசங்கள் மரிக்கவில்லை, ஆனால் கரைந்து கொண்டிருக்கின்றன. ஒரு மெதுவான தேய்வு அல்லது உள்ளிருந்து அழிவு ஏற்பட்டுக் கொண்டேயிருக்கிறது. உள்ளேயிருந்தே பதுங்கி வந்து கொண்டிருக்கும் தீமைகளையும் ஆபத்துகளையும் தேசங்கள் கவனிக்காதபடியால் அவை தாமாகவே அழிந்து கொண்டிருக்கின்றன. காரணம் அவை தேவனையும் அவருடைய சத்தியத்தையும் மறந்துவிட்டன.

தேசங்கள், சட்ட ஒழுங்கின்மை, பொருளாதார சிக்கல், நற்பண்புகளின் இழப்பு, சுயநோக்கு மற்றும் சமூக ஒழுங்கின்மை ஆகியவற்றால் நோய் கொண்டு மரணத்தை நெருங்கியிருக்கின்றன. இந்த ஒழுங்கீனங்களுக்கிடையில் புதிய சட்டங்களைக் கொண்டு வந்தாலும் சமாதானம், ஒழுங்கு ஆகியவை சாத்தியமாகவில்லை. காட்டு மிராண்டிகளின் ஊடுருவல், தேசம் தொடரும் உள்ளான குழப்பங்களை தடுக்காமல் தடையாயிருக்கின்றன. தேசம் சன்மார்க்க நெறியை இழந்து மக்கள் தியாக சிந்தையற்றவர்களாக ஆகிவிட்டனர். தேசம் துண்டாடப்பட்டு ஆபத்துக்குத் திறந்திருக்கிறது.

ஆண்டவரின் அக்கினி சபையில் பற்றி எரியாவிடில் உலகம் சபையை உதாசீனப் படுத்தும்.

இவையெல்லாம் அழிவுக்கான பாதைகள். இந்த அடையாளங்கள் எந்த ஒரு தேசத்துக்கும் வலுவான எச்சரிப்புகளாக இருக்கின்றன. நாம் விழித்தெழவும் கர்த்தருக்கு நேராகத் திரும்பவும் ஆபத்தில் முடியாமலுமிருக்க அபாய எச்சரிக்கை மணியாக இருக்கின்றன.

தேவனை மறந்த தேசத்துக்கு வாய்ப்பு இல்லை. அது மரணத்திற்காக விக்கிர வணக்கத்துக்கு ஒப்புவிக்கப் பட்டுவிட்டது. தேவனுக்குப் பயப்படாததும், அவரை மறந்ததுமான தேசம் எச்சரிப்பை கவனிப்பதில்லை. மக்கள் ஒருமுறை சொல்லப்பட்டதை கேட்காத படியால்தான் சரித்திரம் திரும்பத் திரும்ப வருகிறது. கடந்த காலமின்றி, எதிர் காலத்தைத் தெளிவாகக் காண முடியாது. அரிஸ்டாட்டில் கூறியது போல 'வரலாற்றை அறியாதவர்கள் அதைத் திருப்பி வரச் செய்ய தீர்ப்பளிக்க வேண்டும்'. வரலாற்றின் பாடங்கள் நம்மை வரலாற்றின் கர்த்தருக்கு நேராக வழிநடத்த வேண்டும். வரலாறு தேவனுடையது. எனவே அது அன்பின் செயலோடும், அனைத்து மக்களும் தேசங்களும் அவருக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்று கூறுகிறது. சரித்திரம் உயிர்த்தெழுந்த ஆண்டவரின் பாதங்களின்தான் முடிவடையும். எல்லா முழங்கால்களும் அவருக்கு முன்பாக முடங்கும். எல்லா நாவுகளும் கிறிஸ்துவை ஆண்டவரென்று அறிக்கை செய்யும்.

எழுப்புதலுக்கான நம்பிக்கை

தேவன் ஒரு தேசத்தை அகற்றி விடுமுன், அதோடு பலவழிகளில் கெஞ்சுகிறார். ஒரு தேசத்தின் மிகப்பெரிய நம்பிக்கை எழுப்புதல். தேவன் கிருபையாக ஒரு பலத்த அசைவை அவரது தூய ஆவியால் அனுப்பி, மக்களைத் தம்முடன் சரியான தொடர்பை ஏற்படுத்துவார். மக்களும் அவருடைய வெளிப்படுதலை ஏற்றுக் கொண்டு அவரை தேவனாக வைக்க வேண்டும். மக்கள் மனப்பூர்வமாக தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும்போது தேவன் இரக்கத்தைக் கட்டளையிடுவார். இதற்கு நினிவே சிறந்த எடுத்துக்காட்டு. எழுப்புதல் தேவை என்ற உணர்வை மக்களுக்குள் ஏற்படுத்தாவிடில் எழுப்புதல் ஏற்படுவதில்லை. நமது பயங்கர பாவத்தையும் தவறையும் சுட்டிக் காட்டுவதாலோ, பல கூடுகைகளை ஏற்படுத்தினாலும் எழுப்புதல் ஏற்படாது. எழுப்புதலைக் குறித்துப் பாடினாலும், மக்கள் பயப்படும்படி வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்துக் கூறுவதாலும் எழுப்புதல் வரப்போவதில்லை.

சர்வ வல்ல தேவனுடைய கிருபையால் மக்கள் தேவ வெளிப்பாட்டைப் பெற்று அவர் யார் என்பதை அறிந்து, விசுவாசத்தோடு அவருக்குக் கீழ்ப்படியும் போதுதான் எழுப்புதல் ஏற்படும். விசுவாசமும் ஒருமனமுமுள்ள ஜெபம் வானங்களைத் திறந்து உண்மையான எழுப்புதலைத் தரும். தேவனுடைய பரம தரிசனத்தை பெற விசுவாசமுள்ள ஜெபம் கொண்டு சேர்க்குமிடத்திற்கு தேவபிள்ளைகளைக் கொண்டுவருவது எது? தேவ வசனமே அதற்கு ஏதுவாயிருக்கிறது. இயேசுக் கிறிஸ்துவாகிய ஆண்டவர் உயர்த்தப்பட்டு, வசனம் அவரது அழகிலும் வல்லமையிலும் அறிவிக்கப்பட வேண்டும். இந்த உள்ளான வெளிப்பாட்டால் அவர் தமது ஜனங்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற மகிமையான உணர்வு உண்டாகிறது. அப்பொழுது தங்கள் சபைகளிலுள்ள வேறுபாடுகளையும் முரண்பாடுகளையும் நீக்கிவிட்டு உத்தம கீழ்ப்படிதலுக்குத் தங்களை அர்ப்பணிப் பார்கள். அவரைத் தவிர நமக்கு எந்த நம்பிக்கையுமில்லை. அவருக்கு நம்மை முழுவதுமாக ஒப்புவிக்கும்போது நாம் உப்பாகவும் ஒளியாகவும் மாறுவோம். அவர் கிருபையாகத் தமது ஆவியை நம்மீது ஊற்றுவார். **ஆவியால் நிரப்பப்பட்ட சபைதான் இன்று தேசத்தின் மிகப்பெரிய தேவை.** அதன் பின்புதான் சபை அவரது உயிர்த்தெழுந்த வாழ்வுக்கும் வலிமைக்கும் வாய்க்காலாக விளங்கும்.

இது கர்த்தரைத் தேடுவதற்கான காலம்

இன்று சபை தேவன் யார் என்ற பார்வையை இழந்து அவரது பரிசுத்தத்தை நாம் பார்க்காதபடியாலும் அறியாதபடியாலும் தேவபயமில்லை. நமது பரிசுத்தக் குறைச்சலைக் குறித்து மனம் நொறுங்குதலும் நடுங்குதலும் இல்லை. அவரது மன்னிப்பையும் கிருபையையும் நாம் பார்க்காதபடியால் நமக்கு சந்தோஷமில்லை. அவருடைய திட்டங்களையும், நித்திய நோக்கங்களையும் நாம் காணக்கூடாமல் வாழ்வின் அர்த்தமும், நோக்கமும் குறைபடுகின்றன. தரம் குறைந்தவைகளுக்காக நம்மைக் கடைசிவரை நடத்துகிறோம்.

(3-ம் பக்கம் பார்க்க)

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

M **வருகையின் தூதன் ஊழியத்தை தினந்தோறும் உங்கள் ஜெபத்தினாலும், மாதந்தோறும் உங்கள் காணிக்கையினாலும் தாங்குங்கள்.**

Y **மாதந்தோறும் தபாலில்/வங்கியில் அனுப்ப இயலாதவர்கள் வருடத்திற்கு ஒரு முறை குறைந்தபட்சம் ரூபாய் 500 அனுப்புங்கள்.**

S **உங்கள் பிறந்த நாள், திருமண நாள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகளின் பிறந்த நாள் போன்ற மகிழ்ச்சியான தினங்களில், ஆண்டவருடைய ஊழியத்திற்கு சிறப்பு காணிக்கை அனுப்பி ஆண்டவரின் ஆசீர்வாதத்தை பெறுங்கள்.**

EL SHADDAI

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2022 நவம்பர் மாத பத்திரிகைக்காக என் தேவனை 'வெகுமனத்தாழ்மையோடும் கண்ணீரோடும்' துதிக்கிறேன் அப்.20:19. செப்டம்பர் மாத உபவாச ஜெபத்தை ஆண்டவருக்கு மகிமையாக நடத்த தேவன் இரக்கம் பாராட்டினார். செப்டம்பர் மாதம் 20-ம் தியதி இந்த ஆசிரியர் கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன்.

செப்டம்பர் மாதம் 16-ம் தேதி மாலை 4.15 மணிக்கு நாகர்கோவில் ரயில் நிலையத்திலிருந்து நானும் மகனும் புறப்பட்டோம். வழக்கம்போல விருதுநகர் ரயில் நிலையத்தில் பாஸ்டர் அற்புதராஜ் அவர்களும், மதுரையில் சகோதரர் துரைசிங் அவர்களும் எங்களோடு இணைந்து கொண்டார்கள். அதிகாலை 4.30 மணிக்கு எழும்பூர் வந்து கார் மூலம் சேப்பாக்கம் "**அழைப்பின் எதிரொலி தேவ சபை**" வந்து சேர்ந்தோம்.

குஜராத்திலிருந்து எனது சகோதரியும் அவர்கள் மகனும், நாகர்கோவிலை சார்ந்த போதகர் ஒருவரும் முந்தின நாளே அங்கு வந்து தங்கியிருந்தார்கள். நாங்கள் 7 பேரும் ஆயத்தமாகி கார் மூலம் அண்ணாநகர் **இயேசு விசாரிக்கிறார் சபை** போய் சேர்ந்தோம்.

1. உபவாச ஜெபத்தை சபை போதகர் **இறையன்பு V. ஜான்** அவர்கள் மிகவும் நேர்த்தியாய் ஒழுங்கு செய்திருந்தார்கள்.
2. அவர்களுடைய போதகர் ஐக்கியத்திலிருந்து ஏராளமான போதகர்கள் தங்கள் சபை விசுவாசிகளோடு வந்திருந்தது மிகவும் சிறப்பாயிருந்தது.
3. உபவாச ஜெபத்தில் சில I.E.M. மிஷனெரிகளும், சென்னை ஒருங்கிணைப்பாளர் சகோதரர் D.ஜெயசீலன் அவர்களும் கலந்துகொண்டது அதிக சந்தோஷமாயிருந்தது.
4. வருகையின் தூதன் வாசகர் இரண்டு பேர் வந்திருந்தாலும் மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாயிருந்தது. ஒருவர் தனது முகவரியை கொடுத்தார், அவரது பத்திரிகை பதிவு எண் CN 03100. இன்னொருவர் தனது முகவரியை எழுதும் போதே மொபைலை ஆன் பண்ணி CN 01072 L என்று எழுதினது சந்தோஷமாயிருந்தது.
5. அந்தமான் உபவாச ஜெபங்களை நடத்த மிகவும் உதவியாயிருந்த எனது உறவினர்கள் வேலையினிமித்தம் தாமதமாக வந்தாலும் மிகவும் உற்சாகமாயிருந்தது.

உபவாச ஜெபம் முடிந்த உடனே கார் மூலம் எழும்பூர் வந்து சேர்ந்தோம். இரவு 8.00 மணிக்கு ரயில் ஏறி ஞாயிறு காலை 9.00 மணியளவில் நாகர்கோவில் வந்து சேர்ந்தோம்.

எனது சகோதரிக்கு 85 வயதாகிறது. 16-ம் தேதி குஜராத்திலிருந்து சென்னை வந்த அவர்கள், மிகவும் சுகவீனமாயிருக்கும் எங்கள் உறவினரை சந்தித்தார்கள். 17-ம் தியதி உபவாச ஜெபத்தில் குஜராத் மாநிலம் பற்றிய உண்மையான தகவல்களை பகிர்ந்து கொண்டார்கள். எங்களோடு நாகர்கோவில் வந்திருக்கும் அவர்கள், கர்த்தருக்குச் சித்தமானால் 27-ம் தியதி மகனுடன் மறுபடியும் குஜராத் செல்கிறார்கள், தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

அக்டோபர் உபவாச ஜெபத்திற்கு **வருகையின் தூதன் வாசகர்** எத்தனை பேர் வருவீர்கள் என்று எனக்குத் தெரியாது. கர்த்தருக்குச் சித்தமானால் நவம்பர் மாதம் 12-ம் தியதி சென்னை, அயனாவரம் **கிறிஸ்டியன் அசெம்பிளி மிஷன்** சபையில் நடை பெறும் உபவாச ஜெபத்திற்கு கட்டாயம் வாருங்கள் என்று அதிக அன்பாய் அழைக்கிறேன்.

ஆதலால் நீங்கள் இப்பொழுதே **உபவாசத்தோடும்** அழுகையோடும் புலம்பலோடும் உங்கள் முழு இருதயத்தோடும் என்னிடத்தில் திரும்புங்கள் என்று **கர்த்தர் சொல்லுகிறார்.**

சீயோனிலே எக்காளம் ஊதுங்கள், பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள், விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள்.

ஜனத்தைக் கூட்டுங்கள், சபையைப் பரிசுத்தப் படுத்துங்கள்; முதியோரைச் சேருங்கள், பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள்; மணவாளன் தன் அறையையும், மணவாட்டி தன் மறைவையும் விட்டுப் புறப்படுவார்களாக.

கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது: கர்த்தாவே, நீர் உமது ஜனத்தைத் தப்பவிட்டுப் புறஜாதிகள் அவர்களைப் பழிக்கும் நிந்தைக்கு உமது சுதந்தரத்தை ஒப்புக்கொடாதிரும்; உங்கள் தேவன் எங்கே என்று புறஜாதிகளுக்குள்ளே சொல்லப்படுவானேன் என்பார்களாக.

அப்பொழுது கர்த்தர் தமது தேசத்துக்காக வைராக்கியங் கொண்டு, தமது ஜனத்தைக் கடாட்சிப்பார். யோவேல் 2;12-18.

உபவாச ஜெபத்திற்கு வயது ஒரு தடையே கிடையாது. உபவாசித்து ஜெபிக்கும்போது பசிக்காது, சுகர், பிரஷர் எந்தவிதமான பாதிப்பையும் ஏற்படுத்தாது.

"**அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால் உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்**" 1 பேதுரு.5:7.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உங்கள் சகோதரன்
வெஸ்லி தேவதாசன்
(WESLEY DEVADASON)

அலுவலகம் : 95432 21008
உதவி : 94897 40295

அறிவிப்புகள்

காசோலை ***(Cheque & Draft)***
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வங்கி வழியாக காணிக்கை அனுப்புவோர்
உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்
Mobile : **95432 21008** Whatsapp :**9489740295**
e-mail:varukayinthoothan@hotmail.com

பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **370601000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(1-ம் பக்க தொடர்ச்சி)

எனவே, நாம் நமது நாடுகள் ஆபத்தான நிலையில் இருப்பதையும், கடந்த கால தவறுகளையே மறுபடியும் மறுபடியும் செய்து கொண்டிருப் பதையும் உணர்ந்து கொள்ளுவது அவசியம். உண்மையைச் சொன்னால் கடந்த காலங்களைவிட கூடுதலாகவே தவறுகள் செய்யப்படுகின்றன. எவ்வளவோ ஆசீர்வாதங்களைப் பெற்ற நாம் அவருக்கு அதிகமாகக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். அவருடைய இரக்கங்களால் மட்டுமே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆனாலும் புதிய மனந்திரும்புதலுக்காகவும் முழுமையான அர்ப்பணத்திற்கும், விசுவாசத்திற்கும் நம்மை முழுமையாக அர்ப்பணிக்க இது சமயம்! கர்த்தரை பரிசுத்த வாஞ்சை யுடன் இணைந்து தேட வேண்டிய காலம் இது! கிறிஸ்துவின் சரீரமாகிய சபை முகங்குப்புற விழுந்து அவருடைய முகத்தைத் தேடுவது சபைகள் அனைத்திற்கும் தலையாய கடமை.

எழுப்புதல் வரும்போது சபை தனக்கு ஆசீர்வாதமாக மட்டுமல்ல, உலகத்திற்கே மாதிரியாக மாறிவிடும். பகைமை நிறைந்த கண்களின் பார்வை சபையை எதிர்க்கும். ஏனெனில் மகிமையான சபையினைக் கண்டு பிசாசு பயப்படுகிறான். எதிர்ப்பும் தாக்குதலும் தேவபிள்ளைகளுக்கு உலகத்திலிருந்தும் சபைக்குள்ளிருந்தும், உலக மக்களிட மிருந்தும் வரும். ஆனால் தேவன் தமது சபையை சொந்தமாக்கிக் கொள்வதால் அது தமது வல்லமைக்குள் இருப்பதைக் காண்பிப்பார். அவரது உயிர்த்தெழுந்த சரீரத்தின் ஜீவன் புதிதாக வெளிப்படுத் தப்படும். அவருடைய பரிசுத்தத்தின் அழகில் சபை அவரை ஆராதிக்கும். சுவிசேஷம் அங்கிருந்து மகத்துவ வல்லமையுடன் முன்னேறிச் செல்லும். அற்புதமான ஆண்டவரின் வழியில் அது வளரும். அப்போது சபை எப்படியிருக் கும்! தேவனுடைய மகிமை நம்மீது பொழியட்டும்! வேதவாக்கியங்களை சபை உன்னிப்பாய் கவனிக்க வேண்டும்! நமது இருதய பிரச்சனைகளில் எவை தேவனுடைய பரம உறவிலிருந்து நம்மைப் பிரிக்கின்றன என்பதையும், அவரது மகிமையின் வாஞ்சையை விட்டு எது நம்மை விலக்குகிறது என்பதையும் நாம் கவனித்து செயல்பட வேண்டும்.

வல்லமையால் தரிப்பிக்கப்படுதல்

புதிய ஏற்பாட்டு சபை பரத்தி லிருந்து வந்த வல்லமையால் தரிப்பிக்கப் பட்டது. உயிர்த்தெழுந்த ஆண்டவரின் வாழ்வால் சந்தோஷம் நிரம்பி வழி வதையும் அவர்களிலிருந்த ஆண்டவரின் பிரசன்னத்தையும் காண இன்று உலகம் வாஞ்சிக்கிறது. வேதவாக்கு சொல்வது போல உலகத்தைத் தாக்கமடையச் செய்யவும், உணர்த்தவும் இயேசு கிறிஸ்து என்ற அற்புதமான ஆண்ட வரைப் போல எவருமேயில்லை. நமது சபையில் ஏற்படும் எழுப்புதல் ஒன்றே தேசத்திற்கும் உலகத்திற்கும் ஒரே நம்பிக்கை. சபையைக் குறித்து தேவ ஆவியானவர் சொல்வதற்குக் கீழ்ப்படிய சபை செய்ய வேண்டியதென்ன? இணைந்து தேவனுடைய முகத்தைத் தாழ்மையுடனும் கருத்துடனும், மனந் திரும்புதலுடனும், வாஞ்சையுடனும் ஆவியானவரின் துணையுடனும் ஜெபிப் போம்.

ஆண்டவருடைய இருதயத்தில் சபை இருந்தால் மட்டுமே சம உலகத்தின் இருதயத்திற்குச் செய்தியளிக்க முடியும். ஆண்டவரின் அக்கினி சபையில் பற்றி எரியாவிடில் உலகம் சபையை உதாசீனப் படுத்தும். வெதுவெதுப்பான சபையில் தேவன் பிரியப்படுவதில்லை. நமக் குள்ளே ஆவியானவரின் வாக்குத்தத்தம் நிறைவேற அவரைத் தேடுவோம்.

ஆவிக்குரிய வாழ்வும் வல்லமையும் நிரம்பிவழிதல்

The overflow of spiritual life and power

Rich Carmicheal

உலகத்திலும், நம்மைச் சுற்றிலும் ஒரு வேறுபாட்டை உண்டுபண்ண கர்த்தர் நம்மை தமது ஆவியாலும் ஜீவனா லும் நிரப்பி ஆயத்தப்படுத்துகிறார் என்பதை இந்த செய்தி நினைவுபடுத்து கிறது. அவர் நம்மை ஆசீர்வதிக்கவும், அது வழிந்தோடி பிறருடைய வாழ்வில் தாக்கம் ஏற்படுத்தவும் எதிர்பார்க்கிறார். தேவன் ஆபிரகாமிடம்: "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர் வதித்து உன் பேரைப் பெருமைப் படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்; உன்னை ஆசீர்வதிக்கிற வர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவர்களைச் சபிப்பேன், பூமியி லுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" ஆதி.12:2-3. இயேசு தமது சீஷர்களை நோக்கி : பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது, நீங்கள் பெலனடைந்து, எருசலே மிலும், யூதேயா முழுவதிலும், சமாரியா விலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" அப்.1:8.

இயேசுக் கிறிஸ்துவின் முன் மாதிரியைப் பாருங்கள்! அவர் பரிசுத்த ஆவியினாலும், வல்லமையினாலும் நிறைந்தவராய் காணப்பட்டார் அப்.10:38; லூக்.3:22; 4:14. அவரது ஊழியத்தைக் குறித்து ஏசாயா: கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொறுங்குண்ட வர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை யையும், கட்டுண்டவர்களுக்கு கட்ட விழ்த்தலையும் கூறவும் ..... அவர் என்னை அனுப்பினார் ஏசா.61:1-3; லூக்.4:18-19. தாம் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும், குணமாக்கவும், மக்களைக் குணமாக்கவும் அனுப்பப்பட்டார் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆவியின் வாழ்வு அவரில் நிரம்பி வழிந்து பிறருக்குச் சேவை செய்வதில் அவரை ஈடுபடுத்தியது.

உப்பும் ஒளியும்

இயேசு நாம் உலகத்துக்கு உப்பாகவும் ஒளியாகவும் இருப்பதாக சீஷருக்குச் கூறுகிறார் மத்.5:3-16. உலகம் இத்தகைய உப்புக்காகவும் ஒளிக்காகவும் தீவிர தேவையோடிருக்கிறது. எனவே சபை ஆவியால் நிரப்பப்பட்டு வல்ல மையும் ஜீவனும் தேவ அன்பும் நிறைந்த தாயிருப்பது அவசியம். Whitting hill தமது கட்டுரையில், "புதிய ஏற்பாட்டு சபை, பரத்திலிருந்து வரும் வல்லமையால் தரிப்பிக்கப்பட்டு இயேசுவின் உயிர்த் தெழுதலின் சந்தோஷம் அங்கு நிரம்பி வழிந்ததுபோல கர்த்தரின் பிரசன்னம் வெளிப்படுவதை நாம் காண வேண்டும்" என்கிறார்.

மறுரூபப்படுத்தும் வல்லமை

பவுல், சீலா, தீமோத்தேயு ஆகியோர் தெசலோனிக்கேயாவில் செய்த ஊழியத்தை நினைவுபடுத்து வோம். அவர்கள் அந்தப் பட்டணத் துக்குள் பிரவேசித்தபோது அம்மக்கள் விக்கிரக வணக்கத்தால் நிரம்பியிருப் பதைக் கண்டார்கள். ஆயினும் குறுகிய காலத்துக்குள் "..... ஜீவனுள்ள மெய் யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு தங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பியதை ....." 1 தெச.1:9-10 வசனங்களில் வாசிக்கிறோம். இந்த ஆவிக்குரிய மாற்றத்திற்குக் காரணமென்ன? "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத் தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும் பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத் தோடும் வந்தது. நாங்களும் உங்களுக் குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே" 1 தெச.1:5. இந்த சந்திப்பின் தாக்கத்தால் அவர்கள் மட்டு மல்ல, அவர்களது வாழ்வு, மற்றவர் களுக்கு மாதிரியாயிருக்க ஏதுவாயிருந் தது. "இவ்விதமாய் மக்கெதொனியா விலும், அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள், எப்படி யெனில் உங்களிடத்திலிருந்து கர்த்தரு டைய வசனம் மக்கெதொனியாவிலும், அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக் குறித்து ஒன்றுஞ் சொல்ல வேண்டியதிராதபடிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று" 1 தெச.1:7-8.

சபை எழுப்புதலடைந்து பரத் தின் வல்லமையால் தரிக்கப்பட்டு கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் ஜீவனாலும், பிரசன்னத்தாலும் ஏற்படும் சந்தோஷத்தால் நிரம்பி வழிந்தால் பெரிய காரியங்கள் நடைபெறும்.

(4-ம் பக்கம் பார்க்க)

பாலைவனத்தின் தனியான, விரும்பப் படாத, அமைதியான இடத்தில் முட்செடி எரிந்தது. அவருடைய மெல்லிய குரல் கேட்டது, அவருடைய காட்சியும் வெளிப்பட்டது.

(3-ம் பக்க தொடர்ச்சி)

நாமும் இவ்வித அன்பால் நிரப்பப்பட்டு பவுலும் அவரது கூட்டாளிகளும் போல ஆத்தும பாரங்கொண்டு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்வது மட்டுமல்ல இழந்து போன ஆத்துமாக்களோடு நமது அன்பு அதிகமாக இருக்க வேண்டும் 1 தெச.2:7.

எழுப்புதல்கள் தேவபிள்ளைகளை விழித்தெழச் செய்து, அவரது பிரசன்னம், வல்லமை, அன்பு ஆகியவற்றால் அவர்களை நிரப்பி, பிறருடைய வாழ்விலும், சமுதாயத்திலும் தாக்கம் ஏற்படுத்தியது என்று வரலாற்றின் மூலம் அறிகிறோம். Wesley Duewel என்பவர் 'எழுப்புதலுக்கான இதயக்கதறல்' என்ற கட்டுரையில், 'எழுப்புதல் வரும்போது விசுவாசிகள் விழிப்படைந்து, கிறிஸ்துவைப்போல மாற்றம் பெறுவார்கள். இரட்சிக்கப்படாத அனேகரும், சுவிசேஷத்துக்கு எதிராயிருந்து இருதயத்தைத் திறவாதவர்களும் தேவனுடைய இரட்சிப்புக்கான கிருபையைத் தேடுவார்கள். பல வருடங்களாகச் செய்யப்படாத பணிகள் குறுகிய காலத்தில் செய்து முடிக்கப்படத்தக்கதாக தேவபணி தூண்டப்படும். தேவ தூண்டுதலால் இயற்கைக்கு அப்பாற்பட்ட விளைவுகளை நாம் காணலாம் என்று எழுதுகிறார்.

பாவத்தோடு போராடு, கர்த்தரைத் தேடு

அனேக மிஷனெறிகளும் தரிசு நிலங்கள் பண்படுத்தப்படும்போது எழுப்புதல் ஏற்படுவதையும், கடினமான இருதயங்கள் மறுபிறப்படைவதையும் கண்டிருக்கிறார்கள். 'நீங்கள் நீதிக்கென்று விதை விதையுங்கள், தயவுக்கொத்ததாய் அறுப்பு அறுங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள்; கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப் பண்ணுமட்டும் அவரைத் தேட காலமாயிருக்கிறது' ஓசியா 10:12. தரிசு நிலத்தைப் பண்படுத்த தங்கள் வாழ்வின் பாவங்களைக் கண்டுபிடித்து, அறிக்கையிட்டு அதிலிருந்து மனந்திரும்புகிறார்கள். தங்கள் இருதயங்களை ஜெபத்தின்மூலம் ஊற்றி அவரது பிரசன்னத்தையும் வல்லமையையும் தேடினார்கள். கர்த்தர் தமது உத்தமத்தினால் தமது ஜீவனையும் அன்பையும் அவர்களுக்கு ஊற்றிக் கொடுத்து, அவர்களது வாழ்வின் மூலம் அனேகர் தாக்கமடையச் செய்தார்.

இவ்வாறு எழுப்புதலடைந்தவர்களின் அனுபவங்களைக் கண்ட நாம், இன்னும் அதிகமாக அவருடைய பிரசன்னம், வல்லமை, அன்பு ஆகிய வற்றைப் பெற விரும்புகிறோமா? அப்படியானால் பாவத்தை எதிர்க்கவும் தேவனைத் தேடவும் ஜாக்கிரதைப்பட வேண்டும். அப்படிச் செய்யும் போது, கர்த்தர் நம்மை எழுப்புதலடையச் செய்யவும், நம் மூலமாக அனேகர் தாக்கமடையவும் செய்வார். கீழ்க் குறிப்பிடும் வாக்குத்தத்தங்களைப் படியுங்கள். என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள், தங்களைத் தாழ்த்தி, ஜெபம் பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது, பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவங்களை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு ஷேமத்தைக் கொடுப்பேன்" 2 நாளா.7:14. "..... உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடுவீர்களானால் என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள்" எரேமி. 29:11-13.

நாம் பாவத்திலிருந்து முற்றிலும் திரும்பி, தேவனை நோக்கி வரும்போது, அவர் நம்மைத் தமது பிரசன்னத்தாலும் வல்லமையாலும் வேண்டியமட்டும் நிரப்பி, அது நிரம்பி வழிந்தோடவும் செய்வார். எல்லா மகிமையும் அவருக்கே.

"உமது ஜனங்கள் உம்மில் மகிழ்ந்து களிகூரும்படி நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்க மாட்டீரோ? கர்த்தாவே, உமது கிருபையை எங்களுக்குக் காண்பித்து, உமது இரட்சிப்பை எங்களுக்கு அருளிச் செய்யும். கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ தங்கள் மதி கேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக. நம்முடைய தேசத்தில் நன்மை வாசமாயிருக்கும்படி, அவருடைய இரட்சிப்பு அவருக்குப் பயந்தவர்களுக்குச் சமீபமாயிருக்கிறது" சங்.85:6-9.

*****

எழுப்புதலுக்காக இதயக்கதறல்

Heart Cry for Revival

Wesley Duewel (1916-2016)

எழுப்புதல் நிச்சயமாக ஏற்படும் என்பதற்கு நான் இரண்டு காரணங்களைக் குறிப்பிட முடியும். நான் ஊழியம் செய்த பல நாடுகளில், பல இடங்களில் தேவ பிள்ளைகள் எழுப்புதலுக்கான வாஞ்சையோடு இருப்பதை கண்டேன். இந்தப் பரிசுத்த வாஞ்சைக்குக் காரணமானவர் பரிசுத்த ஆவியான வரே. நாம் கண்ணீரோடு அவர் சமூகத்தில் வந்து பாரத்தோடு சபை எழுப்புதலடைய ஜெபிக்கவும் அந்த எழுப்புதல் வரும்போது என்ன நடைபெறும் என்பதைக் காண்கிறவராகவும் இருக்கிறார்.

எழுப்புதலின் சூழல் பரவும் போது அதில் ஈடுபட்ட குடும்பங்கள், நண்பர்கள், சபை எல்லாம் தங்களை தேவ கிருபைக்கு ஒப்படைப்பார்கள். ஆண்டவராகிய இயேசு எந்த கறையும் திரையுமில்லாத பரிசுத்த அழகிய மணவாட்டியை விரும்புகிறார். எழுப்புதல் மணவாட்டிக்கு ஆச்சரியமான காரியங்களைச் செய்கிறது. அது நம்மை இயேசுவைப் போலாக்குகிறது.

சபையின் எழுப்புதலுக்கான வாஞ்சை திரியேக தேவனுடைய இருதயத்தில் இருக்கிறது. நமது இருதயங்களிலிருக்கும் வாஞ்சை அவரது இருதயத்தின் மிகமிக ஆழத்திலிருக்கும் வாஞ்சையின் ஒரு மிகச்சிறிய பகுதிதான்.

எழுப்புதலுக்கான வாஞ்சையை தேவன் நமது இருதயங்களில் சிருஷ்டித்தாலும் சரித்திரங்களின் தேவன்தான் அதை அனுப்புகிறார். ஏசாயாவின் எழுப்புதலுக்கான இதயகதறலை ஏசா.64:1-2 வசனங்களில் வாசிக்கிறோம். 'ஆ உமது நாமத்தைச் சத்துருக்களுக்குத் தெரியப்பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்குமுன் தத்தளிப்பதற்கும் தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி உருக்கும் அக்கினி எரியுமாப் போலும், அக்கினி தண்ணீரை பொங்கப் பண்ணுமாப் போலவும் பர்வதங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்'.

அடிக்கடி ஏற்பட்ட எழுப்புதல் தான் மனித குமாரன் பிறக்குமட்டாக இஸ்ரவேலைப் பிழைத்திருக்கச் செய்தது. சாத்தான் தனது வல்லமையை பயன்படுத்தி தேசம் மேசியாவின் வரவைக் குறித்து அறிவித்த தீர்க்கதரிசனம் நிறைவேறாமல் தடுக்க தேசத்தை தாக்குகிறான். யோசபாத் மற்றும் யோசியா ஆகிய அரசர்களின் தலைமையிலும் எழுப்புதல் ஏற்பட்டது. ஆகாஸ் ராஜாவின் காலத்தில் அது மிகவும் பிந்தி விட்டது போலவும், எல்லாம் முடிந்து போனது போலவும் தோன்றியது. ஆகாஸ் ராஜா தன்னால் இயன்ற மட்டும் யெகோவா வணக்கத்தை நசுக்க முயற்சித்தான். பட்டணங்கள் மற்றும் கிராமங்களின் தெரு மூலைகளிலெல்லாம் விக்கிரகங்களை வைத்தான். இறுதியாக தேவாலயம் அடைக்கப்படவும், பலிபீடத்தின் அக்கினி அணைக்கப்படவும் கட்டளையிட்டான். தேசம் விக்கிரகங்களால் மூடப்பட்டு விக்கிரக வணக்கத்தால் நிறைந்தது.

ஆயினும் இரண்டு வாரங்களுக்குள்ளாக மாற்றம் ஏற்பட்டது. பொல்லாத ஆகாஸ் மரித்த அடுத்த நாள் எசேக்கியா பொறுப்பில் வந்தான். அவன் தேவாலயக் கதவுகள் திறக்கப்படவும், லேவியர் ஆலயத்தை சுத்திகரிக்கவும் கட்டளையிட்டான். அவ்வாறே அவர்கள் ஆலயத்தை சுத்திகரித்தனர். அழுக்குகளெல்லாம் பெருக்கி அகற்றப்பட்டன.

அவர்கள் எசேக்கியாவிடம் வந்து, எல்லாம் சுத்தமாயிற்று என்று கூறிய போது, அவன் அடுத்த தினமே ஆராதனை ஆரம்பிக்கக் கட்டளையிட்டான். மக்கள், தலைவர்கள் தேவாலயத்திற்கு வந்து ஆராதனை ஆரம்பித்தனர். கர்த்தரின் பாடல்கள் மறுபடியும் பாடப்பட்டன. பலிபீடத்தில் அக்கினி கொளுத்தப்பட்டது. தேசம் மறுபக்கமாகத் திரும்பியது.

தேவன் எழுப்புதலின் தேவன். வரலாறு அதற்கு சாட்சியாயிருக்கிறது. தேவன் ஜாண் வெஸ்லியையும், ஜார்ஜ் உவைட்ஃபீல்டையும் எழுப்பிய போது பிரிட்டன் எப்படி இருந்தது! அதிபர் பகிரங்கமாக துன்மார்க்கத்தை ஆடம்

(5-ம் பக்கம் பார்க்க)

(4-ம் பக்க தொடர்ச்சி)

பரமாக்கினார். மேன்மக்களின் சமூக நிகழ்வுகளில் மதுபானம் விரும்பும் அளவுக்கு அருந்தவும் அயலாரின் மனைவிகளை பயன்படுத்தவும் விளம்பரமாயிற்று. பாவத்தின் சீர்கேடு உச்சநிலைக்குச் சென்றுவிட்டபடியால் லண்டன், மாஞ்செஸ்டர், பக்கிங்காம் போன்ற நகரங்களில் தனியாக நடமாட முடியாத நிலையிருந்தது. மக்கள் ஆயுதபாணிகளோடு கூட்டம் கூட்டமாகவோ தனிப் பாதுகாவலர்களுடனோ பயணிக்க வேண்டியதாயிருந்தது. ஆனாலும் பிந்திப் போகவில்லை. தேவன் வெஸ்லியையும், உவைட்ஃபீல்டு என்ப வரையும் அவர்களோடு சேர்ந்த தேவ ஜனத்தையும் எழுப்பினார். தேவனுக்கு எதுவும் அதிகப் பிந்திப் போவதில்லை.

எழுப்புதலை சுமந்துகொண்டு வந்தவர்கள்

எழுப்புதலுக்குக் காரணமாக தேவன் எழுப்பினவர்களை எழுப்புதலை சுமந்து வந்தவர்கள் என்று சொல்லலாம். மனிதன் அதை சுமக்காவிட்டாலும், அதில் பயன்படுத்தப்படுவது உண்மை.

சார்ல்ஸ் G. ஃபின்னி என்பவர் எழுப்புதலை சுமந்து கொண்டுவந்த ஒருவர். அவர் தேவன் நடத்தும் இடங்களுக்கெல்லாம் செல்வார். அங்கு இரண்டு மூன்று மாதங்களோ அல்லது எழுப்புதல் ஏற்படும் வரைக்குமோ தங்கியிருப்பார். அவர் மனந்திரும்பிய நாளிலிருந்தே அக்கினிபோல பற்றி எரிகிறவராயிருந்தார். தூய ஆவியான வரின் பொழிவைப் பெற்ற அவர் அந்த அக்கினியைத் தம்மோடு சுமந்து சென்றார். எனவே அவர் சென்ற இடங்களிலெல்லாம் எழுப்புதல் ஏற்பட்டது.

ஜோனதான் கோஃபோர்த் வடசீனாவில் பணி செய்த ஒரு உத்தம மிஷனெறி. சார்ல்ஸ் ஃபின்னி தமது கரங்களால் எழுதிய பல பக்கங்களடங்கிய ஒரு கடிதமும், ஒரு சுவிசேஷ துண்டு பிரதியும் அவருக்குக் கிடைத்தன. அதை வாசித்த பின் தன் மனைவியிடம் "ஃபின்னி எழுதியது சரியாயிருந்தால் நான் அதை நிரூபிக்கப் போகிறேன்" என்றார். தெய்வாதீனமாக அது அவர் கரத்தில் கிடைத்திருந்தது. அதன் மூலமாக அவர் தூண்டப்பட்டார்.

அந்தச் சமயத்தில் அயல்நாட்டு மிஷனெறிகளின் செயலர்ட்டாறென்றோ, கனடியன் பிரிஸ்பிட்டீரியன் சபையிலிருந்து வடசீனா வந்து சிலகாலம் தங்கியிருந்தார். அவர் கோஃபோர்த்திடம் தாம் கொரியா எழுப்புதலைக் குறித்து அறிக்கைகள் மூலம் அறிவதாகவும் அது உத்தமமானதா இல்லையா என்பதை சரிபார்க்கத் தாம் அங்கு செல்வதாகவும் கூறிவிட்டு கோஃபோர்த்தையும் அழைத்தார்.

கோஃபோர்த்தின் உள்ளம் இதை வாஞ்சித்தது. அவர் தயாராகி அங்கு சென்று தேவன் அங்கு என்ன செய்தார் என்பதைக் கண்டார். சீனாவுக்குத் திரும்பி வந்து கொரியாவில் தாம் கண்டதைக் கூறினார். சீனாவிலும் எழுப்புதல் ஏற்பட்டது. கோஃபோர்த் இடத்திற்கு இடம் மாறிச் சென்றார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் எழுப்புதல் ஏற்பட்டது.

எழுப்புதலைத் தரும் தேவனுடைய இயற்கை

தேவன் எழுப்புதலை அனுப்புகிறவர் மட்டுமல்ல, எழுப்புதலடையச் செய்யும் தன்மையையும் உடையவர். அவர் மனதுருக்கமுள்ளவர். அவர் அன்பு நிறைந்தவர். தமது ஆவியை நம்மில் ஊற்ற விரும்புகிறார். வேதவசன அடிப்படையில் நமது நாட்களில் புத்துணர்வின் காலங்களை அனுப்ப அவர் விருப்பமுடையவராயிருக்கிறார். அவர் அதைச் செய்யவும் கூடியவர். நமது ஆவலும் ஜெபமும் எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு அதிகமாக அக்கினியும் இறங்கும். தேவன் இன்றும் அதைச் செய்யக் கூடியவர்.

அவர் தமது மணவாட்டி, பரிசுத்தமும், கறை திரையற்றவளும், அவருடைய மகிமையைப் பிரதிபலிக்கிற வளுமாய் இருக்க வேண்டும் என்ற அவரது வாஞ்சை நிச்சயமாக பதிலைப் பெறும். நாம் எழுப்புதலுக்காக விசுவாசத்தோடு ஏறெடுக்கும் ஜெபத்தின் மூலம் அவர் தூய ஆவியானவரை பகிர்ந்தளிப்பார். நாம் தேவனோடு நெருங்கி எழுப்புதலுக்காக பாரத்தோடு ஜெபிக்க வேண்டும். அதற்கு ஆவியானவர் உதவி செய்கிறார்.

சீஷருடைய விசுவாசமின்மையால் இயேசு பலமுறை ஏமாற்றமடைந்தார். ஆண்டவரது சமூகத்திலிருந்து வர வேண்டிய எழுப்புதலுக்கு நமது பெல வீனமான விசுவாசம் தடையாயிருக்கக் கூடாது. அவரது வாக்குத்தத்தங்களெல்லாம் நமக்குரியவை என விசுவாசிப்போம். இது அவருடைய கிருபையின் காலம், எழுப்புதலின் காலம், புதுப்பிக்கும் காலம் என்றெல்லாம் சொல்லலாம். தம்மைக் குறித்த புதிய வெளிப்பாட்டினை தமது சபைக்கு அளித்து ஆசீர்வதிக்கும் மனித வரலாற்றின் சிறப்பான காலம்.

எழுப்புதலுக்கான தேவனுடைய இருதய கதறல்

எழுப்புதலுக்கான இதயக் கதறல் தேவனுடைய இருதயத்தில்தான் பிறந்தது. அவர் கிருபையும் இரக்கமும் நிறைந்தவர். சபையின் பணி முடிக்கப் படாததால் அவருடைய இருதயம் நமது பக்கமாக நீட்டப்படுகிறது. பல ஆண்டுகளாக செய்யக் கூடாமலிருந்தவைகளை எழுப்புதல் குறுகிய காலத்தில் செய்து விடும்.

அவர் எழுப்புதலின் வல்லமையோடு வரும்போது அவரது பணியைத் துரிதப்படுத்துவது எது? 1858, 1859-ம் ஆண்டுகளில் அமெரிக்காவில் Jeremiah Lamphier என்பவரால் பற்றவைக்கப் பட்டதுபோல ஆவியானவர் சபைகளின் மேல் அசைவாடுவார். அவர் நியூயார்க் பட்டணத்தில் ஒரு ஜெபக்கூடுகையை ஆரம்பித்தார். சில மாதங்களில் பட்டணம் முழுவதும் ஜெபக்கூடுகைகள் ஆரம்பிக்கப்பட்டன. அது அமெரிக்கா முழுவதும் பரவியது.

ஐக்கிய நாட்டின் தலைவர் ஒவ்வொரு நாளும் வாஷிங்டனில் நண்பகல் ஜெபக்கூடுகையில் பங்கெடுத்தார். மாதங்கள் கடந்த போது அமெரிக்காவில் 10000 நகரங்களுக்கு மேலாக தொழிலதிபர்கள் நண்பகல் வேளைகளில் கூடி ஜெபிக்கக்கூடிய பரந்த அறைகளில் ஜெபித்தனர். பல கடைகளின் முன்பு 'ஜெபக்கூடுகை முடியும்வரை கடை திறக்கப்படாது' என்ற வரிகள் தொங்கவிடப்பட்டன.

எவரும் பிரசங்கிக்கவில்லை, ஜெபிக்க மட்டுமே செய்தனர். முதலில் பாடல்களைப் பாடிய பின் மக்கள் ஜெபிக்கக் கேட்பார்கள். அப்போது ஜெப விண்ணப்பங்களுக்காக ஜெபிக்கப் படும். பின்பு ஒரு மணிக்குத் தங்கள் தொழிலுக்குத் திரும்புவார்கள். இது ஐக்கிய நாட்டின் கிழக்குப் பகுதியில் நடைபெற்றது.

தேவன் தமது ஜனத்தின் மீது இறங்கி வர விரும்புகிறார். அவர்களை ஆசீர்வதிக்கவும் விரும்புகிறார். நமது சபை பரிபாலன குழுக்கள், மாநாடுகள் போன்றவற்றின் மீதும் அவர் பொழியப்பட விரும்புகிறார். தமது மகிமையை உயர்ப்பிக்கவும் எல்லார்மேலும் ஆட்சி செய்யவும் அவர் விரும்புகிறார்.

ஏசாயா ஜெபித்தது போன்ற எழுப்புதல் வரட்டும். தாவீது அரசன்தான் முதல்முதலில் எழுப்புதல் வல்லமையுடன் இறங்கிவர ஜெபித்தான். "கர்த்தாவே நீர் உமது வானங்களைத் தாழ்த்தி இறங்கி, பர்வதங்கள் புகையும்படி அவைகளைத் தொடும்." சங்.144:5 அவர் இறங்கி வந்தால் நாம் சாதாரண கிறிஸ்தவர்களாக வாழமாட்டோம். இத்தகைய எழுப்புதல் நம் சபைகள் மீது வரட்டும். ஏசாயாவின் ஜெபத்தை ஏசா.64:1-4 வசனங்களில் படித்துப் பாருங்கள்.

இது தேவன் நம்மில் செய்ய விரும்புவது. நாம் இதை உருவாக்க முடியாது. அதை தேவன் இரக்கமாகக் கொடுக்கிறவர். அவர் சபையை நேசிக்கிறார். ஆனால் இன்னும் சபை ஆயத்தமாகவில்லை. தேவன் சுத்திகரிக்கும் பணியை ஆரம்பிக்கட்டும்.

நீங்கள் எழுப்புதலுக்கான ஒரு மன்றாட்டு வீரராக உங்களை அர்ப்பணிப்பீர்களா? தேவன் தமது கிருபையைக் காண்பிக்கக் காத்துக் கொண்டிருக்கிறார். தேவன் தாமே நம்மிலும், சபைகளிலும், தேசமெங்கும் எழுப்புதலின் அக்கினியை அனுப்பி, அது பற்றி எரியச் செய்வாராக.

கண்ணீர் சிந்துவதும், இருதயம் நொறுங்குவதுமான எழுப்புதலாளர், கண்ணீர் சிந்தி இதயம் நொறுங்கும் பாவிகளை பரிசுத்த தேவனுடைய பாதத்தில்கொண்டு வருவார்கள்.

திறப்பில் நிற்பதற்கான அழைப்பு

A call to stand in the gap

சபையில் அசாதாரண வல்லமை இருப்பதை தேவன் எதிர்பார்க்கிறார். இருண்ட உலகுக்கு ஒளியாக இருக்கவே அது ஸ்தாபிக்கப்பட்டது. உலகம் ஒரு மரண போராட்டத்திற்கான ஆயத்தத் தோடிருப்பதை நாம் காண்கிறோம். மேலும் அது வரலாற்றிலேயே மிக இக்கட்டான நிலையை சந்திக்கப் போகிறது. எனவே நாம் திறப்பில் நிற்பதற்கும், மன்றாடுவதற்கும் அவசர மாக அழைக்கப்படுகிறோம். பாவத்தில் மாளும் மக்களுக்கான பாரத்தை நாம் எடுத்துக் கொள்வோம்.

'ஆ உமது நாமத்தை சத்துருக் களுக்குத் தெரியப் பண்ணுவதற்கும், ஜாதிகள் உம்முடைய சந்நிதிக்குமுன் தத்தளிப்பதற்கும் தேவரீர் வானங்களைக் கிழித்திறங்கி, உருகும் அக்கினி எரியுமாப் போலும், அக்கினி தண்ணீரைப் பொங்கப் பண்ணுமாப் போலவும் பர்வ தங்கள் உமக்கு முன்பாக உருகும்படி செய்யும்" ஏசா.6:1-2. தேவை மிகுந்த இந்த நாட்களில் மனித இனத்திற்கு நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய சேவை விழித்திருந்து ஜெபிக்க சமயம் எடுத்துக் கொள்வதாகும். ஊழியங்களில் சிறந்தது மன்றாட்டு ஜெபம். ஜெபக்குறைவு அறிக்கை பண்ணப்பட வேண்டிய ஒரு பாவம். தேவனோடு ஜெபத்தின் மூலம் உறவு கொள்வது நமது மேலான வாய்ப்பு.

சீயோனின் மதிலிலுள்ள காவற்காரன்

"சீயோனினிமித்தமும், எருசலே மினிமித்தமும் நான் மவுனமாயிராமலும் அதின் நீதி பிரகாசத்தை போலவும், அதின் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப் போலவும் வெளிப்படுமட்டும் அமரா மலும் இருப்பேன். எருசலேமே, உன் மதில்களின்மேல் பகல் முழுதும் இரா முழுதும் ஒருக்காலும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர் களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலா காது. அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரைக்கும் அவரை அமர்ந்திருக்க விடாதிருங்கள்" ஏசா.62:1, 6, 7.

சோதனை வெற்றியாக மாறியது

எஸ்தர் ராணியும் மொர்தெகா யும் ஆபத்தைத் தவிர்க்க உபவாசித்து ஜெபித்தது போல நாமும் இன்று உபவாசித்து ஜெபிக்க வேண்டும். "நடந்த யாவற்றையும் மொர்தெகாய் அறிந்த போது, தன் வஸ்திரத்தைக் கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பலை தலைமேல் போட்டுக் கொண்டு நகரத்தின் நடுவே, புறப்பட்டுப்போய் துயரமுள்ள மகா சத்தத்துடனே அலறினான்" எஸ்தர் 4:1.

எஸ்தர் ராணி சொன்னதென்ன? "நீர் போய், சூசானிலிருக்கிற யூதரை யெல்லாம் கூடிவரச் செய்து மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும் குடியாம லுமிருந்து எனக்காக உபவாசம் பண்ணுங்கள், நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம், இவ்விதமாக சட்டத்தை மீறி ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன். நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச் சொன்னாள்" எஸ்.4:16. இவ்வாறு உடனடியாக வர விருந்த ஆபத்து வெற்றியாக மாறியது. எஸ்தர், மொர்தெகாய் மற்றும் ஜனங்களின் ஜெபங்கள் கேட்கப்பட் டது. யூதர் முழுமையான அழிவிலிருந்து பாதுகாக்கப்பட்டனர்.

பாபிலோனிய சிறையிருப்பி லிருந்த தனது ஜனத்துக்காக தானியேல் தன் முழு ஆத்துமாவோடும் ஏறெடுத்த ஜெபத்தைப் பாருங்கள்! "நான் உபவா சம் பண்ணி இரட்டிலும் சாம்பலிலும் உட்கார்ந்து தேவனாகிய ஆண்டவரை ஜெபத்தினாலும் விண்ணப்பங்களினா லும் தேட என் முகத்தை அவருக்கு நேராக்கி ..... தேவனே நாங்கள் பாவஞ் செய்து அக்கிரமக்காரராயிருந்து துன்மார்க்கமாய் நடந்து கலகம் பண்ணி உம்முடைய கற்பனைகளையும், உம்முடைய நியாயங்களையும் விட்டு அகன்று போனோம்" தானி.9:3-5.

நெகேமியா எருசலேமில் மீந்திருந்தவர்களின் துன்பங்களைக் கேள்விப்பட்டபோது, ... "நான் உட்கார்ந்து சில நாளாய் துக்கித்து, உபவாசித்து, மன்றாடி, பரலோகத்தின் தேவனை நோக்கி : ....." நெகே.1:4 ஜெபித்தான். அதன் பலனாக பெர்சிய அரசன் அர்தசஷ்டா நெகேமியாவோடு மனிதரையும் தேவையான பொருட் களையும் கொடுத்து எருசலேமுக்கு அனுப்பினான்.

யோசியா அரசன் நியாயப் பிரமாணத்தின் வார்த்தைகளைக் கேட்ட போது, தன் வஸ்திரங்களைக் கிழித்தான் 2 நாளா.34:19. ஒரு மகிமையான சீர்திருத்தம் தொடர்ந்தது. யூதாவின் விக்கிரகங்கள் அகற்றப்பட்டன. முன்பை விட பஸ்கா நன்கு ஆசரிக்கப்பட்டது. "..... உன் இருதயம் இளகி, எனக்கு முன்பாக நீ உன்னைத் தாழ்த்தி, எனக்கு முன்பாகப் பணிந்து, உன் வஸ்திரங் களைக் கிழித்து, எனக்கு முன்பாக அழுத படியினால், தானும் உன் விண்ணப் பத்தைக் கேட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" வச.27.

மோசே எப்போதுமே இஸ்ர வேல் மக்களுக்காக மன்றாடினவன். நமது ஆண்டவராகிய இயேசுவைப் போல மன்றாட்டு வீரன். இஸ்ரவேலர் பொன் கன்றுக்குட்டியைச் செய்து வணங்கிய போது அவர்களுக்காக மன்றாடிய போது தன் பெயரை ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடும்படி கேட்டுக் கொண் டான் யாத்.32:32. ஒருவன் தன் சினேகி தருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரி டத்திலுமில்லை" யோவான் 15:13.

ஆண்டவராகிய இயேசு இரவு முழுவதும் ஜெபித்தார். ஜெபத்தின் மூலம் கெத்சமனேயை வெற்றி கண்டார். அவர் நமது பிரதான ஆசாரியர். நமது பலவீனங்களைக் குறித்த உணர்வுகளால் தொடப்படுகிறவர் எபி.4:15. இன்று அவர் நமது பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து நமக்காக மன்றாடிக் கொண் டிருக்கிறார் எபி.7:15. 'அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார், நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ள வேண்டியதின்ன தென்று அறியாமலிருக்கிறபடியால் ஆவியானவர்தாமே நமக்காகப் பெரு மூச்சுகளோடு வேண்டுதல் செய்கிறார். ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின் படியே இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்ன தென்று அறிவார்" ரோமர் 8:26-27.

எழுப்புதலுக்கு முன்னானது கடும் வேதனை

எழுப்புதல் ஏற்படுவது நிச்சயமா னாலும் அதற்கு முன்பு கடும் வேதனை யின் அனுபவம் தேவை. "..... சீயோ னோவெனில் ஒருமிக்க வேதனைப் பட்டும் தன் குமாரரைப் பெற்று இருக்கிறது" ஏசா.66:8. ஆவிக்குரிய குழந்தைகள் பிறக்க ஆவியின் வேதனை வேண்டும். ஒருவன் மக்களைக் கிறிஸ்து வுக்குள் கொண்டுவர (ஆத்துமா இரட்சிக் கப்பட) ஆத்தும பாரம் வேண்டும்.

நியாயத்தீர்ப்புக்காக ஆயத்தமா யிருக்கும் தேசத்துக்காகவும், உலகத்துக் காகவும் திறப்பில் நிற்க அழைக்கப்படு கிறோம். மன்றாட்டு வீரர்கள் வெளியே வர அசுத்தமானவைகளைத் தொடக் கூடாது மத்.22:14, லூக்.21:31 படிக்க.

பவுலின் ஜாக்கிரதையைப் பார்ப்போம்: 'சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேன் என்று நான் எண்ணுகிறதில்லை, ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து முன்னா னவைகளை நாடி கிறிஸ்து இயேசுவுக் குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்' பிலி.3:13-14.

நம் முழு இருதயத்தோடும் தேவனைத் தேடுவோம்

"நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும் படிக்கு நான் உங்கள் பேரில் நினைத் திருக்கும் நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். அவைகள் தீமைக் கல்ல, சமாதானத்துக்கேற்ற நினைவுகள். அப்பொழுது நீங்கள் கூடிவந்து என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள். நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னை தேடுவீர்களானால் என்னைத் தேடுகை யில் கண்டுபிடிப்பீர்கள்" எரே.29:11-13.

தேவை மிகுந்த இந்த நாட்களில் மனித இனத்திற்கு நாம் செய்யக்கூடிய மிகப்பெரிய சேவை விழித்திருந்து ஜெபிக்க சமயம் எடுத்துக் கொள்வதாகும். ஊழியங்களில் சிறந்தது மன்றாட்டு ஜெபம். ஜெபக் குறைவு அறிக்கை பண்ணப்பட வேண்டிய ஒரு பாவம்.

ஆவிக்குரிய தீவட்டியைத் தூண்டிவிடுவோம்

Kindling of spiritual Torch

A.W.Tozar (1897-1963)

தேவனுடைய மந்தையை மேய்ப்பதில் அனுபவமுள்ளவர்களுக்கு மற்ற சீஷரைவிட ஸ்தேவான் ஏன் மேன்மை பெற்றான் என்பது தெரியும். ஸ்தேவான் ஆவிக்குரிய நன்மையுடைய வனாகவும் தேவனுக்காக அதிக வைராக்கியமுள்ளவனும் அவருக்காக எரிந்தும் வெந்துபோகாத முட்செடியுமாயிருந்தான்.

சபையை எடுத்துக்கொண்டால் அதில் ஒரு சிலர் மட்டுமே தேவனுக்காக ஜுவாலிப்பதையும் மற்றுமுள்ள அநேகர் அமைதியாயிருப்பதையும் காண்கிறோம். அமைதியாயிருப்பவர் களும் இரட்சிக்கப்பட்டவர்கள்தான். ஆனால் அதற்கு அப்பால் அவர்களது வாஞ்சை செல்வதில்லை. ஆவிக்குரிய அலை அவர்களிலில்லை. தேவவசனத் தின்படி அவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்பதில் அவர்கள் திருப்தி யடைந்து விடுகிறார்கள்.

அவர்கள் வேதகலாசாலையில் போதிக்கலாம். பாடற்குழுவில் சேர்ந்து பாடலாம். கிறிஸ்தவ துண்டுபிரதிகளை வினியோகிக்கலாம். அயலாருக்கு வேத வசனத்தை அறிவிக்கலாம், அப்.6:15-ல் காணப்படுவது போன்ற தேவதூதனின் முகம் பிரகாசிப்பது போன்ற பிரகாசத் தை அவர்கள் முகத்தில் காணமுடியாது.

எனது போதகப் பணியின் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக, கிறிஸ்தவர்கள் தங்களை ஆவியானவரின் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதில்லை என்று காண்கிறேன். தேவனை அறிகிற அறிவு ஒன்றே அவர்கள் காலமெல்லாம் அவர்கள் வாஞ்சையாயிருக்க வேண்டும் என்று அவர்கள் தீர்மானிப்பதில்லை. அந்த நல்ல தீர்மானத்தைச் செய்கிறவர் கள் தலைமுறைதோறும் சத்தியத்திற்குச் சாட்சியாயிருக்கிறார்கள்.

தீவிரமான ஜுவாலை

பவுல் அப்போஸ்தலனிடம் காணப்பட்ட பக்திவைராக்கியம், கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மைக் காக எல்லாவற்றையும் உதறித்தள்ளச் செய்தது பிலிப்.3:8.

ஆவிக்குரிய பக்திவைராக்கியம் பெலவீன பக்தர்களைப் பலப்படுத்தி தைரியமுள்ளவர்களை ஆசீர்வாதமான ஆவிக்குரிய உன்னத நிலைக்கு உயர்த்து கிறது. இத்தகைய ஆவிக்குரிய வைராக்கி யத்தால் பற்றி எரிகிற கிறிஸ்தவர்களிட மிருந்துதான் தேவனது மிகப் பெரிய பணிகள் எழும்புகின்றன.

இதற்கு சிறந்த உதாரணம் ஈவான் ராபர்ட்ஸ் என்று சொல்லலாம். வேல்ஸ் எழுப்புதலுக்காக அவர் மனித காரணியாயிருந்தார். அவரது சாட்சி ஆச்சரியமானதும், அந்த அனுபவத்தை நாமும் பெறத்தூண்டுவதுமாயிருக்கிறது.

அவரது அனுபவத்தை விளக்க அவர் பயன்படுத்தும் மொழி அவரது ஆவிக்குரிய வைராக்கியத்தை வெளிப் படுத்தியது. திடீரென எனது தூக்கத்தி லிருந்து விழித்தேன். வல்ல தேவ பிரசன்னத்தால் விவரிக்க முடியாத ஆனந் தத்தாலும், ஆச்சரியத்தாலும் நிறைந் தேன். ஏறக்குறைய நான்கு மணி நேரம் அவரோடு ஒரு நண்பனிடம் பேசுவது போல முகமுகமாய் பேசினேன். காலை நான்கு மணிக்கு பூமிக்குத் திரும்பியது போல உணர்ந்தேன்.

என்னை வளையும் என்னை வளையும்

Bend me! Bend me!

கொஞ்ச நேரத்தில் ஆச்சரியமான ஒரு தாக்கம் என்மீது வந்தது. ஒரு ஜீவனுள்ள விசை எனக்குள் நுழைவதை உணர்ந்தேன். மூச்சை அடக்கிக் கொண் டேன். என் கால்கள் அதிகமாக நடுங்கின. ஒவ்வொருவராக ஜெபிக்க ஜெபிக்க விசையும் அதிகரித்துக் கொண்டே வந்தது. அது எனக்குள் வெடித்துவிடும் போன்ற உணர்வு ஏற்பட்டது. நாம் ஜெபிக்காவிட்டால் அது வெடித்திருக்கும்.

அப்படி எனக்குள்ளே கொதித் தது : "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினால் தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணினார்" ரோமர் 5:8.

நான் என் முழங்கால்களில் விழுந் தேன். எனது கரங்கள் எனக்கு முன்னா லிருந்த இருக்கையில் விரிக்கப்பட்டன. என் முகத்தின் வழியாக வியர்வை வடிந் தது. கன்னங்கள் வழியாகக் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அது இரத் தமோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட் டது. 'என்னை வளையும் என்னை வளை யும்' என்று கதறினேன். அவர் என்னை வளைத்த போது சமாதானத்தின் அலை என்னை நிரப்பியது.

தேவன் விரும்புகிறபடியும், நாம் வாஞ்சிக்கிறபடியும் அளவற்ற கிரு பையை அவர் ஒவ்வொருவருக்கும் தரு கிறார். நாம் சொந்தமாக்கிக் கொண்ட தற்கும், சொந்தமாக்கிக் கொள்ள விரும் புவதற்கும் வேறுபாடு இருந்தால், நமது விருப்பம் தேவன் எதிர்பார்ப்பதல்ல என அறிந்துகொள்ளலாம். தேவன் நமக்கு வேண்டும். அதற்கு மேலாக நாம் வேண்டு வதை அவர் பார்த்துக்கொள்வார்.

நமது வாஞ்சை வெதுவெதுப்பா யிருக்கிறது. அது ஆவிக்குரிய சுகவீனம். தேவனிடம் சென்று அதைக் குறித்தும், பிற பாவங்களைக் குறித்தும் அறிக்கை யிட்டு விசுவாசத்தில் பலப்படுவோம். சுத்தமான வாஞ்சையின் ஜுவாலை நமக்குள் பற்றி எரியும்.

ஆழமான வாஞ்சை வரும் போது ஒரு முழுமையான புது உலகம் உங்கள் முன்னால் திறக்கும். வேதபுத்தகத்தின் எளிய சத்தியம், புதிய ஆசீர்வாதமான கருத்துடன் உயிர்த்து வரும். கிறிஸ்து உங்களுக்கு மிகமிக அருமையானவராகி விடுவார். நமது வாழ்வு புதிதும் ஆச்சரிய முமான பக்தியுடன் பிரகாசிக்க ஆரம் பிக்கும்.

தேவனுக்கு அவருடைய மனிதருண்டு

God has his men

Leonard Ravenhill

சத்துரு பிரளயம் போல் வந்து விட்டான். தீர்க்கதரிசியின் சத்தமும் கேட்கப்படவில்லை என்று கிறிஸ்தவ னின் இருதயம் கலங்க வேண்டாம். தேவன் தமது மனிதரை ஒளித்து வைத்திருக்கிறார். அவர்கள் அவரது செய்தியை மட்டும் கொண்டு வருவார் கள். விலைப்பட்டியலோ, விற்பனைப் பொருளோ அவர்கள் கையிலிருப்ப தில்லை. எதையும் ஒழுங்குபடுத்துவதோ முன்னேற்றுவதோ அவர்கள் பணியல்ல. தேவனுடைய பரிசுத்தத்தை அறிவிப்பது ஒன்றே அவர்கள் பணி.

இஸ்ரவேலரின் சரித்திரத்தில் ஒரு இக்கட்டான வேளையில் யோவான் ஸ்நாபகன் வந்தான். வரண்ட ஆத்துமாக் கள் வெப்பமான பாலைவனத்தில் அவனைத் தேடிவந்தனர். அஸ்மறி வேதகலாசாலையின் விரிவுரையாளரான ஹெரால்டு என்பவரின் வார்த்தை களைக் கேட்போம் : "கிறிஸ்தவம் உலகுக்கு ஒரு வெள்ளித்தாலத்தில் விளம்பப்படவில்லை, அது தூய்மையற்ற உலகில் மேலான எல்லையற்ற வல்லமையுடன் பிறந்தது."

இங்கிலாந்து தவறான போதனை யில் மரித்து, உண்மையற்ற அரசியலால் கெட்டு, ஆக்ஸ்போர்டு கல்விமான் வெஸ்லிக்கு அன்புக்கரம் நீட்டக்கூடாத நிலையிலிருந்தது. அநியாயம், முறை கேடான வரி, கேடுபாடுகள், குடிவெறி ஆகியவை வெஸ்லியின் காலத்தில் மிக அதிகமாயிருந்தன. அரசியலில் தேசம் மடிந்து பீடங்களில் குளிர்ந்த மனிதரும் நின்றனர். ஆனால் வெஸ்லி ஆவியால் அபிஷேகிக்கப்பட்ட செய்திகளைக் கொண்டு வந்தபோது தேசம் அவருக்கு முன்பாக உருகியது.

பொய்யான போதகங்கள் பல மக்களால் உலகமெங்கும் பரவச் செய்யப் படுவதால் ஃபின்னி, வெஸ்லி என்பவர் களின் காலத்தைவிட இந்நாட்கள் கொடியவைகளாயிருக்கின்றன. சவால்கள் ஏராளமாகிவிட்டன. ஆயினும் அவை களுக்கெல்லாம் மேலான தேவன் நமக்கு உண்டு. வேத புத்தக அடிப்படை யிலான புதுவாழ்வு ஆவியால் பிறந்ததும் நித்திய மானதுமான வாழ்வாகும்.

எழுப்புதல் என்பது கர்த்தரு டைய செயல். அது நமது கண்களுக்கு ஆச்சரியமானது. கண்ணீர் சிந்துவதும், இருதயம் நொறுங்குவதுமான எழுப்புத லாளர், கண்ணீர் சிந்தி இதயம் நொறுங்கும் பாவிகளை பரிசுத்த தேவனுடைய பாதத்தில் கொண்டு வருவார்கள். "உண்மையான எழுப்புதல்

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்க தொடர்ச்சி)

என்பது ஒரு சமுதாயத்தின் சன்மார்க்க காலநிலையை மாற்றுகிறது" என்று Dr. Tozer குறிப்பிட்டுள்ளார். யோவான் ஸ்நாபகன் போன்றவர்கள் உலக சரித்திதில் இடம்பெற்றவர்கள்.

தேவனுடைய இருதயத்தை நெருங்குவதும் அவருடைய சத்தம் கேட்பதும், அவரது சித்தம் செய்வதும் மேலானவை. அவரை நாம் துரிதப்படுத்த முடியாது. பாலைவனத்தின் தனியான, விரும்பப்படாத, அமைதியான இடத்தில் முட்செடி எரிந்தது. அவருடைய மெல்லிய குரல் கேட்டது, அவருடைய காட்சியும் வெளிப்பட்டது.

ஜெபம் என்னும் பள்ளியிலிருந்தும், பாலைவனத்திலிருந்தும் மக்கள் வெளிப்பாடுகளைப் பெற்று, அவரது பூரண சித்தத்தை நிறைவேற்றவும், தேசங்களை மடக்கி, மக்களை விடுதலை பண்ணவும் மடிந்தது. **கீர்க்கர்களின் பள்ளியில் நெருக்கமில்லை. அங்கே பாடக்கிட்டமில்லை. தேவன் காலத்துக்கேற்றபடி அவர்களை வடிவமைக்கிறார்.** அவர்கள் அனைவர்களும் தனித்தவர்களும், பிரத்தியேகமானவர்களும், ஆவல் நிறைந்தவர்களும், வல்லமையானவர்களும், பாடனுபவித்தவர்களுமாயிருந்தனர். அவர்கள் தாங்கள் மற்றவர்களை ஆசீர்வதிக்க தங்கள் இரத்தத்தை சிந்த வேண்டும் என்று அறிந்திருந்தார்கள்.

ஆண்டவரே, எழுப்புதலாளர்களை அனுப்பும்

இன்று நமது தேசம் பொருளாதாரம், சன்மார்க்கநெறி, ஆவிக்குரிய தன்மை எல்லாவற்றிலும் நொறுங்கிக் கிடக்கிறது. நாம் நம்மைக் குறித்து எண்ணியிருப்பதில் பாதி அளவு ஆவிக்குரிய தன்மை இருந்தால் நாம் இரட்டுடுத்தி, தலையில் சாம்பலைப் போட்டுக் கொண்டு தேவசமூகத்தில் பிரவேசிப்போம். ஆனால் நாமோ நிர்விசாரமாயிருக்கிறோம். ஆழமற்ற ஜெபம், பிரசங்கம் ஆகியவை நமக்குப் போதுமானவைகளாயிருக்கின்றன. ஏசாயா 20:2,3 வசனங்களில் கூறப்படுவது போல ஒரு அடிமை போல வஸ்திரமில்லாமல் வெறுங் காலால் நடப்பது நல்லது.

எரேமியாவும் தனது ஜனங்களுக்காகப் புலம்பி அழுதான். அவர்களது அக்கிரமத்தின் தண்டனை அவன் சிறையில் அடைக்கப்படவும், சகதி நிறைந்த கிணற்றில் தூங்க வேண்டியது மாயிற்று. சமாதானம் இல்லாத காலத்தில் எப்படி சமாதானத்தைக் கூறுவது! வரப் போகும் தண்டனையை அறிந்து அவன் தனியாக உட்கார்ந்திருந்தான் எரே.15:7.

சுகவீனமானதும், மரித்துக் கொண்டிருப் பதுமான சபைக்கு ஆண்டவருக்குக் காத்திருப்பதும், அவர் சத்தம் கேட்பதும், அவரது வல்லமையின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்வதற்குமான செய்தியைச் சொல்லும் மனிதர் தேவை.

மாம்ச சிந்தையோடு நெடுங் காலம் உழைத்துவிட்டோம். லௌகீக ஆசீர்வாதங்களான பெரிய கட்டிடங்கள், அதிக எண்ணிக்கையில் மக்கள், அதிகமான காணிக்கை ஆகியவை தேவ தயவைக் காண்பிப்பதாக எண்ணுகிறோம். பலவீன பிரசங்கங்களைக் கேட்கிறோம். தேவன் தாமே எழுப்புதலாளர்களைத் தருவாராக. இந்த இருளான மனித வரலாற்று நாட்களில் யோவான் ஸ்நாபகனைப் போன்ற எரிந்து பிரகாசிக்கிற மக்களைத் தேவன் தரட்டும். **ஜான் நாக்ஸைப் போல, "ஆண்டவரே, ஸ்காட்லாந்து அல்லது இங்கிலாந்து அல்லது அமெரிக்கா அல்லது இந்தியாவை எனக்குத் தாரும், அல்லது நான் சாகட்டும் என்று ஜெபிப்போமா?**

உமது பணியை உயிர்ப்பியும் ஆண்டவரே
பெந்தெகொஸ்தின் ஆவியைத் தாரும்
மகிமை யாவும் உமக்கே உரியது
ஆசீர்வாதங்கள் எங்களுக்குக் கிடைக்கட்டும்

எழுப்புதல் வரும்போது சபை தனக்கு ஆசீர்வாதமாக மட்டுமல்ல, உலகத்திற்கே மாதிரியாக மாறிவிடும்.

ஜெபம்

"ஜெபமாகிய இரகசிய பலிபீடத்தை எரிய விடுங்கள். இரகசிய தியானம் நமது மார்க்கத்துக்கு சாரமும் நிரூபணமும், அளவுமானியுமாயிருக்கிறது. இந்த முக்கிய விஷயத்தில் நாம் நம்மை ஆராய்ந்து பார்ப்போம். தனி தியானத்தில் வெதுவெதுப்பாயிருக்கிறோமா? தியானமாகிய அக்கினி நமது இருதயங்களில் மங்கி எரிகிறதா? அப்படியானால் இந்த நிலையின் அபாயத்தை உணருவோம். அழுகையோடும் புலம்பலோடும் தேவனிடம் சென்று, கிருபையின் ஆவிக்காகவும், விண்ணப்பத்தின் ஆவிக்காகவும் ஜெபிப்போம்"

- Charles H. Spurgeon

அறிவிப்புகள்

நீங்கள் கடிதம், காணிக்கை அனுப்பும் ஒவ்வொரு தடவையும் உங்கள் **பத்திரிகை பதிவு எண், தொலைபேசி எண்** இரண்டையும் கட்டாயம் எழுதுங்கள்.

கடிதம், காணிக்கை, கொரியர்அனுப்ப வேண்டிய முகவரி :

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் - 629 001.

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil - 629 001.
Mobile : 9543221008

ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!

எழுப்புதலுக்காக இதய கதறல்

(7 மணி நேர உபவாச ஜெபம்)

இடம் : **Christian Assembly Mission**
21/215, Mettu Street, Ayanavaram, Chennai, Mobile : 8056002334

நாள் : ***12.11.2022,*** *2-வது சனிக்கிழமை*

நேரம் : *காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை*

செய்தி : *சகோதரன்* **வெஸ்லி தேவதாசன்**

ஜெபம் : **NIMS மிஷனெரிகள்,** *குஜராத்*
IEM மிஷனெரிகள், *தமிழ்நாடு*

தொடர்பு : **வருகையின் தூதன்** *மொபைல் : 9543221008*

சிந்தனைக்கு

இன்று **சபை** தேவன் யார் என்ற பார்வையை இழந்து அவரது பரிசுத்தத்தை நாம் பார்க்காதபடியாலும் அறியாதபடியாலும் **தேவ** பயமில்லை.

கிறிஸ்தவம் உலகுக்கு ஒரு வெள்ளித்தாலத்தில் விளம்பப்படவில்லை, அது தூய்மையற்ற உலகில் மேலான எல்லையற்ற **வல்லமை**யுடன் பிறந்தது

சர்வ வல்ல தேவனுடைய **கிருபை**யால் மக்கள் தேவ வெளிப்பாட்டைப் பெற்று அவர் யார் என்பதை அறிந்து, விசுவாசத்தோடு அவருக்குக் கீழ்ப்படியும் போது தான் **எழுப்புதல்** ஏற்படும்.

விசுவாசமும் ஒருமனமுமுள்ள **ஜெபம்** வானங்களைத் திறந்து உண்மையான **எழுப்புதலைத்** தரும்.

தேவன் விரும்புகிறபடியும், நாம் வாஞ்சிக்கிறபடியும் அளவற்ற கிருபையை அவர் ஒவ்வொருவருக்கும் தருகிறார். நாம் சொந்தமாக்கிக் கொண்டதற்கும், சொந்தமாக்கிக் கொள்ள விரும்புவதற்கும் வேறுபாடு இருந்தால், நமது **விருப்பம்** தேவன் எதிர்பார்ப்பதல்ல என அறிந்துகொள்ளலாம்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason